RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22272

OPEN ACCESS

# இரட்சணிய யாத்திரிகம் - இகபர சந்திப் படலத்தின் வழி அறியலாகும் இறைவனைப் போற்றும் பண்பாடு

**சீ. மெர்சி செல்வம் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி-627007, தமிழ்நாடு, இந்தியா

# Ratchaniya Yaathirigam - The culture of praising God, which is known through the ikapara verse

**S. Mercy Selvam [a, *]**

[a] Department of Tamil, Sarah Tucker College, Tirunelveli-627007, Tamil Nadu, India

* Corresponding Author: profmercyselvam@gmail.com

Received: 05-10-2022
Revised: 11-11-2022
Accepted: 18-11-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

One of the cultural traditions of tamils is the worship of god. H.A. Krishna Pillai was hailed by all as a Christian Kambar. The thesis is based primarily on the epic 'Ratchaniya Yaathirigam', one of the greatest of his works. This thesis is titled Rakshaniya Yatrikam Ikabara Chandidalam, the culture of worshiping God. It describes the cultural tradition of praising God. From this article, see that god's qualities and deeds are praised and praised. In this article, see that God is praised as the God of creation, as the embodiment of grace, and as a tri-deity also reveals the cultural tradition of thinking of God as king and father.

**Keywords:** Rakshaniya Yatrikam, Worship, Krishna Pillai, God

## முன்னுரை

முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர்கள் தமிழர்கள். இறைவனை வழிபடும் முறைமைகளில் ஒன்று இறைவனைப் புகழ்ந்து போற்றுதலாகும். தமிழர்கள் இறைவனைப் போற்றுதலை ஒரு பண்பாடாகவே கொண்டுள்ளனர். அவ்வகையில் தமிழ்க் கிறித்தவர்களுள் ஒருவரான எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை அவர்களும் இரட்சணிய யாத்திரிகத்தின் இகபர சந்திப் படலத்தில் மாந்தர்கள் வழி இறைவனைப் போற்றுகின்றார். அவர்கள் போற்றித் துதித்த பண்பாட்டினை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

## இரட்சணிய யாத்திரிகம் - இகபர சந்திப்படலம்

'இகபர சந்திப் படலம்' இரட்சணிய யாத்திரிகத்தின் ஐந்து பருவங்களுள் ஐந்தாவது பருவமாகிய இரட்சணிய பருவத்தின் இரண்டாவது படலமாகும். "இரட்சணியம் என்பது இரட்சிப்பாகும். அதனை மீட்பு, ஈடேற்றம் எனவும் குறிப்பிடலாம். முக்தி நெறியில் சென்று கொண்டிருந்த கிறித்தவனும் அவனது நண்பன் நம்பிக்கையுமாகிய இருவரும் ஈடேற்றம் பெறுவதைக் கூறுவதே இப்பருவத்துச் செய்தியாகும். என்ற குறிப்பினை கிறித்தவக் காப்பியங்கள் என்ற நூலிலிருந்து அறியமுடிகின்றது (Gnanachandra Johnson, 2013).

## இறைவனைப் போற்றுதல்

இறைவன் செய்த நன்மைகளுக்காக இறைவனைப் போற்றுவது ஒவ்வொருவரின் கடமையாகும். இரட்சணிய யாத்திரிகக் காப்பியத்தில் இறைப்போற்றுதலுக்குரிய பாடல்கள் அனைத்தும் 'போற்றி' என்ற சொல்லால் முடிவு பெறுகின்றது. 'போற்றி' என்பதற்கு துதித்தல், புகழ்மொழி என்றெல்லாம் விளக்கம் தருகிறது. இறைவனுடைய குணநலன்களையும், பெருமைகளையும், அவரது செயல்பாடுகளையும் உயர்வாகக் கூறி போற்றுகின்ற மரபு காலங்காலமாக மக்களிடம், குறிப்பாக தமிழர்களிடம் இருந்து வருகின்றது.

"தேவனைத் துதிப்பது என்பது அவர் எவ்வளவு மேன்மையானவராகவும், அற்புதமானவராகவும் இருக்கிறார் என்பதைச் சிந்திப்பதாகும். அவரது மகிமை மற்றும் அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பைப் பற்றி நினைக்கும் போது நமது உணர்வுகள் எழுப்பப்படுகின்றன என்பதே இதற்குப் பொருள். நாம் தேவனைத் துதிக்கும்போது அவரது மேன்மை நம்மை நிரப்புமாறு இடம் கொடுக்கிறோம்" என்று இந்திய வேதாகம இலக்கியம் (1989:95 96) குறிப்பிடுகின்றது. இக்கருத்தின் அடிப்படையில் துதித்தலின் அவசியத்தை அறியமுடிகின்றது. இரட்சணிய யாத்திரிகத்திலும் இறைவனைப் போற்றுதல் இடம்பெறுகின்றது.

## இகபர சந்திப் படலத்தில் போற்றுதல்

கிறிஸ்தியான், நம்பிக்கை ஆகிய இருவரும் மரண ஆற்றைக் கடக்கின்றர். அதன்பின் அவர்கள் இறைவனின் அருட்செயலை நினைத்துப் போற்றி மகிழ்கின்றார்கள். இதனை உணர்த்தும் விதமாக,

"சீவ முத்தியங் கரைபிடித் தேறிய செல்வர்

மேவு பேரின்ப தலம்புக்க விந்தையை யுன்னித்

தேவ தேவப ராபர திரித்துவ தேவை

ஆவ லிற்றுதித் தன்பொடு போற்றுவா னமைந்தார்"

என்ற பாடல் அமைந்துள்ளது. இப்பாடலைத் தொடர்ந்து வருகின்ற முப்பத்தாறு பாடல்களும் இறைவனைப் போற்றும் விதமாகவே பாடப்பெற்றுள்ளன. இப்பாடல்கள் 'தேவாரம் போற்றித் திருவிருத்தங்கள்' எனும் தலைப்பில் அமைந்துள்ளன (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998).

"ஆதிமத் யாந்த ரகிதநிஷ் களங்க

அநாதியங் கடவுளே போற்றி" (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998)

என ஆதியும் அந்தமுமில்லாத இறைவனை, அநாதி கடவுளைப் போற்றுகின்றனர்.

## படைப்பின் கடவுளைப் போற்றுதல்

இறைவனை கடவுள், தேவன் என்றெல்லாம் குறிப்பிடுகின்றோம். இறைவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் என்பதை,

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"

என்ற விவிலிய வார்த்தை மெய்ப்பிக்கின்றது. இத்தகைய கடவுளை,

"பேதியா நிலைநின் றுலகெலாந் தந்த

பிரணவ தெய்வமே போற்றி!" (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998)

என்று போற்றுவதை இப்படலம் வாயிலாக அறியமுடிகின்றது.

## கருணை வடிவானவரைப் போற்றுதல்

தீயவழியில் சென்றவர்களை பிரளய கால வெள்ளத்தில் ஆழ்த்தி, நோவாவையும் அவரது குடும்பத்தாரையும் பிழைக்கச் செய்த கருணை வடிவானவர்,

"நன்னெறி யிகந்தோர் பிரளயத் தமிழ

நயந்திடு நாதனே போற்றி

மன்னுநோ வாவோ பெண்மரைப் புரந்த

மாபெருங் கருணையாய் போற்றி"

என்றெல்லாம் போற்றப்படுகின்றார் (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998).

## அருளாளனைப் போற்றுதல்

இறைவன் உயிர்கள் அனைத்திற்கும் அருள் செய்கின்றவராகவே திகழ்கின்றார்.

"அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வானை"

என்ற பாடல்வழி இறைவன் ஆதரவற்றவர்களுக்கும், உதவி இல்லாதவர்களுக்கும் அருள் செய்கிறார் என்பதை அறியமுடிகிறது. ஆபிரகாமின் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் என்ற செய்தியை,

"உன் சந்ததியைப் பூமியின் தூளைப் போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால் உன் சந்ததியும் எண்ணப்படும்"

என்ற வேதாகமப் பகுதி உணர்த்துகின்றது. இக்கருத்தை இரட்சணிய பருவத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர் பேராசிரியர் பொன்னு.ஆ.சத்தியசாட்சி 'இகபர சந்திப் படலப்' பாடல் உரையில் காணலாம்.

"ஆபிரகாமுக்கு அவனுடைய முதிர் பருவத்தில் ஒரு மகனை அளித்த கேடில்லாத அருளாளனே போற்றி!" என்று உரை செய்துள்ளார் (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998).

"கொற்றமொ டிசரேல் வளமிகு காணான்

குடிபுக வருளினாய் போற்றி"

என்ற பாடலில் இஸ்ரவேல் மக்களை காணான் நாட்டிற்கு குடியேற அருள் செய்தவனைப் போற்றிப் பாடுவதைக் காணமுடிகின்றது.

"மேலைநாள் யூத சனஞ்சிறைப் படவும்

மீளவு மருளினாய் போற்றி!"

என்ற பாடல் வரிகள் யூத மக்கள் பாபிலோனியாவில் சிறை வைக்கப்பட்டு மீட்டெடுத்த இறைவனைப் போற்றுவதற்காக அமைந்துள்ளன.

## திரியேக தெய்வத்தைப் போற்றுதல்

திரித்துவம் என்பது பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற மூன்றும் இறைவனில் ஒன்றாகக் காண்பது.

"ஆரணத் திரித்துவமே - எமை

ஆண்டருள் மகத்துவமே"

என்னும் கீர்த்தனைப் பாடலில் திரித்துவம் என்ற சொல் குறிப்பிடப் பெற்றுள்ளது. கீர்த்தனைக் கவிஞர்கள் இறைவன் மூன்றில் ஒன்றானவராக விளங்கும் தன்மையை அடியொற்றி இச்சொல்லைக் கையாண்டுள்ளனர். இரட்சணிய யாத்திரிகத்தில் திரியேக தெய்வத்தைப் போற்றும் விதமாக,

"செந்நெறிச் சென்றார்க் குறுதுணை யாய

திரியேக தெய்வமே போற்றி"

என்ற வரிகள் அமைந்துள்ளன (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998).

## விண்ணகத்து அரசனைப் போற்றுதல்

இறைவன் அனைத்திற்கும் மேலானவன். தன்னிகரில்லாதவன். அவ்விறைவனை இவ்வுலகில் காணப்பெறும் உயர்ந்தவற்றோடு ஒப்பக் கருதிப் புகழ்ந்து ஏத்துவது பழந்தமிழர்ச் சமய, இலக்கிய மரபு சார்ந்தது. 'அரசன்' என்பவன் கடவுளுக்கு அடுத்தபடியாக மரியாதை செய்யப்படுபவன். எனவே இறைவனை அரசனாகப் புகழ்ந்தனர். முறையாக மக்களைக் காப்பாற்றும் அரசன் தமிழரிடையே கண்கண்ட தெய்வமாகப் போற்றப்பெற்றான் என்பதை,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்" (Gowmareeswari, 2004)

என்ற திருக்குறள் சுட்டும்.

"வித்தகன் யோசேப் பினைநனி யுயர்த்தும்

விட்புல வேந்தனே போற்றி!"

"இலங்குமைங் காயங் காட்டி யெம்பிரான் றிருமு னென்றும்

வலங்கிளை ரணைமீ துற்ற மானுவே லரசே போற்றி!"

இந்த இரண்டு பாடல்களும் முறையே யோசேப்பை உயர்வு பெறச் செய்த விண்ணகத்து அரசனைப் போற்றும் தன்மை உடையதாகவும், பிதாவின் வலதுபக்கத்தில் அமர்ந்த மானுவேலாகிய அரசனைப் போற்றும் விதமாகவும் அமைந்துள்ளன. இவைகளிலிருந்து இறைவன் அரசனாகப் போற்றப்பெற்ற தன்மைகள் புலனாகின்றன (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998).

## தந்தையாக நினைத்துப் போற்றுதல்

கிறித்தவத்தில் இறைவன் தந்தையாகப் போற்றப்படும் மரபு பரவலாகக் காணப்படுகின்றது.

"கள்ள னாயினும் வெள்ளாயினும்

பிள்ளை நான் உனக்கல்லவோ?

கர்த்தனே வலப்பக்க மேவிய கள்ளனுக் கருள் செய்தையே

தள்ளி என்னை விடாமல் உன்னடி தந்து

காத்தருள் அப்பனே" (Suresh Danial, 2005)

என்றும்,

"ஆத்தும் சரீரம் எனக்காக யாவையும்

அப்பனுன் கையிலொப்புவித்து நான்

அமர்ந்து தூங்குவேன்" (Suresh Danial, 2005)

என்றும் இறைவனைப் போற்றுகின்றனர். இக்கருத்தமைந்த பாடல்கள் இரட்சணிய யாத்திரிகத்திலும் இடம்பெற்றுள்ளன.

"எம்முறை பாட்டுக் குள்ள மிரங்கிடு மெந்தாய் போற்றி!"

என்ற வரியில் விண்ணப்பங்களுக்கு இரங்கி பதில் அளிக்கின்ற இறைவனை தந்தையே எனப் போற்றுகின்றனர்.

"சருவலோ கமுமீ டேறவோர் மகவைத்

தந்தருள் தந்தையே போற்றி!"

என்ற பாடல் வாயிலாக உலக மக்கள் புது வாழ்வு பெற ஒரே புதல்வனை உலகுக்கு அளித்த தந்தையாகிய இறைவனைப் போற்றுவதை நாம் அறிகின்றோம் (Dhayanandhar Francis & Mosas Mikkal Parade, 1998).

## முடிவுரை

எல்லா காலத்தும் இறைவனைப் போற்றுதல் ஒரு பண்பாடாகக் கருதப்படுகிறது. அனைத்து வகையான இலக்கியங்களும் இறைவனைப் போற்றிப் புகழ்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவ்வகையில் தழுவல் காப்பியங்களுள் ஒன்றான இரட்சணிய யாத்திரிகமும் இறைவனைப் போற்றுதலை உள்ளடக்கியுள்ளது. படைப்பினை உணர்ந்தும், கருணையை உணர்ந்தும், அருளை உணர்ந்தும் இறைவனைப் போற்றுவதை அறியமுடிகின்றது. அரசனாக, தந்தையாக இறைவனை எண்ணிப் புகழ்ந்து பாடுகின்ற பண்பாட்டு மரபினையும் அறிந்துக்கொள்ளும் முறையிலும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## References

Dhayanandhar Francis, T., Mosas Mikkal Parade, (1998) Ratchaniya Yaathirigam, Christian Literature Society, India

Gnanachandra Johnson, Y. (2013) Krishthuva Kaappiyangal, International Institute of Tamil Studies, Chennai, India

Gowmareeswari, S. (2004) Thirukural Parimelalhagar, Saradha Pathippagam, Chennai, India

Suresh Danial, P. (2005) Keerthanai Padalkalum Krishthuva Marabakamum, Doctoral Dissertation, Manonmaniam Sundaranar University, Tirunelveli, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License